★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 6௨ சனி (19—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 7௨ ஞாயிறு (20—5—56) {இதழ் [illegible]

'பிக்பென்' கடிகாரத்திற்கு 3 மாத ஓய்வு

லண்டன், மே [illegible]

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கட்டடித்தின் மீதுள்ள '[illegible]' எனப்படும் $13\frac{1}{2}$ டன் கனமுள்ள உலகிற் பெரிய கடிகாரம், [illegible] மாத முதல் மூன்று மாத ஓய்வு எடுத்துக்கொள்ளப்போகிறது.

பி. பி. சி ரேடியோ மூலம், உலக முழுவதற்கும் [illegible] காரமணி ஓசையையே ஒலிபரப்புவது வழக்கம்.

இப்போது இந்தக் கடிகாரம் எண்ணெயிட்டுச் சுத்தம் [illegible] யப்படும். இந்த வேலை முடிய 3 மாத காலமாகும். அதுவரை பி. பி. சி. ரேடியோ, செயிண்ட் பால் கதீட்ரலில் உள்ள '[illegible]' கடிகார மணி ஓசையை உலகுக்குப் பரப்பும்!

'தம்பிவா! தலைமை ஏற்று நடத்தவா!'

— (★) —

'உன் ஆணைக்கு நாங்கள் அடங்கி நடப்போம்!'

மாநாட்டுத் தலைவருக்கு அண்ணா உறுதி மொழி

இரண்டு இலட்சம் பேர் கூடிய மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் துவக்கம்

இரா. நெடுஞ்செழியன் தலைமையேற்ற வைபவம்

இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சி:

திருச்சியில் சிறப்புற அமைக்கப்பட்டிருக்கும் வள்ளுவர் நகரில் தி. மு. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டின் 2-ம் நாள் மாலை நிகழ்ச்சி மாலை சுமார் 3-30 மணிக்கு சினிமா பின்னணிப் பாடகியார் தோழியர் செல்வா அவர்களின் இன்னிசையுடன் தொடங்கியது.

இன்னிசை முடிவுற்றதும் கழகப் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

பம்பாய், அகமதாபாத், இலங்கை, பெங்களூர், திருவிதாங்கூர், சித்தூர் முதலிய மாவட்டங்களிலிருந்தும், நெல்லை, இராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, சென்னை, வடார்க்காடு, சேலம், கோவை, நீலகிரி முதலிய மாவட்டங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை மாநாட்டுக்குத் தலைமை தாங்குமாறு கோரினர்.

பின்னர் சென்னை சட்டசபை உறுப்பினர் திரு ஏ. கோவிந்தசாமி குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம், மாணவர்கள் சார்பில் தோழர் டி. கே. பொன்னுவேலு, தோழர் எம். எஸ் மணி, தோழர் ஈ. வெ. கி. சம்பத்,

(4-ம் பக்கம் பார்க்க)

இன்று (19—5—56) மாநாட்டுத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமைச் சொற்பொழிவை காலை 11 மணி யளவில் ஆற்றத் தொடங்கினர்.

அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டுத் தலைவரை வழிமொழிகையில், "தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்! தலைமை ஏற்று நடத்த வா!", என்று மொழிந்தபோது, மாநாட்டிற்கு வந்திருந்த இலட்சக்கணக்கான மக்களின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது.

'நாவலர் வாழ்க! காவலர் வாழ்க! அண்ணா வாழ்க! அறிஞர் வாழ்க! பொதுச்செயலாளர் வாழ்க! நெடுஞ்செழியன் வாழ்க' என்பன போன்ற வாழ்த்தொலிகள் விண்ணை அதிரச் செய்தன எனின் மிகையாகாது.

பொதுச்செயலாளர் தலைமைப் பதவியை ஏற்கு முன் அவருக்குப் பல்வேறு மாவட்டங்களின் சார்பிலும், தனிப்பட்ட கழகங்களின் சார்பிலும், தனிப்பட்டோர்களின் சார்பிலும் நூற்றுக்கணக்கான மலர் மாலைகளும், சரிகை மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

மாநாட்டில் குழுமியிருந்த ஏறக்குறைய இரண்டு இலட்சம் மக்களின் வாழ்த்தொலிக்கும், கைத்தட்டலுக்கும் இடையே காவலர் தலைமைப் பதவியை ஏற்றார். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அதனைக் கண்டோருக்கு வாழ்வில் ஒரு திருநாள் [illegible] மிகவும் பொருத்தமுடையதாகும்.

நாவலர் நெடுஞ்செழியன் சுமார் 11 மணிக்குத் தமது தலைமையுரையைத் தொடங்கினர். பகல் 1 மணி வரையிலும் அவர் [illegible] னர் வரும்)

மாநாட்டின் முடிவுகளை அறிதற் பொருட்டு மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் சிலர் திருச்சியில் வந்து தங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

வாக்கெடுப்பு நாளை!

★

திருச்சி, மே. 19—

தி. மு. க. மாநில மாநாட்டில் இன்று (19—5—56) நடைபெறுவதாக இருந்த 'வாக்கெடுப்பு' நாளைக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது. இன்று மாலையில் சிறப்புச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெறும்.

மூவலூர் மூதாட்டியாருக்கு அன்புக்காணிக்கை

இன வாழ்வுக்குத் தொண்டாற்றிய இராமாமிர்தத்தம்மையாருக்கு தி. மு. கழக விருது

'அன்புக்குரிய மூதாட்டியார் அன்னிபெசண்ட் போன்றவர்'

காந்தியாரின் கருத்தைக் கவர்ந்த அம்மையாருக்கு அண்ணா பாராட்டு

சமூக மறுமலர்ச்சிக் கொள்கைகளைப் பரப்புவதற்கு காளையர்க்கு அன்பழைப்பு

"மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையாருக்கு உடல் வெகுவாகத் தளர்ந்து விட்டது; உடல் தளர்ச்சிக்கு ஏற்ப உள்ளம் தளர்ந்துவிடவில்லை என்றாலும், ஓரளவு உள்ளமும் தளர்ந்துதான் விட்டது. கனிந்து முதிர்ந்த கனியாக இருக்கும் மூதாட்டியார், அன்னிபெசண்ட் அம்மையார் அரசியலில் ஈடுபட்ட காலத்தில் இருந்த முதிர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த அன்னி பெசண்ட் அம்மையாருக்கு, கைலாகுதர, கார்தந்துதவ, கவர்னர்களும் கலெக்டர்களும் இருந்தார்கள்; ஆனால் நமது மூதாட்டியாருக்கு அப்படி எவரும் இல்லை. அன்புக் காணிக்கை தரும் நாம்தான் இருக்கிறோம். மூதாட்டியார் இன்னும் நீடுழிக்காலம் வாழ்ந்து நமக்கெல்லாம் நல்லாசி பகன்று, இயக்கம் வெற்றிபெற வாழ்த்தவேண்டுமென விரும்புகிறோம்,"

என்று, அண்ணா அவர்கள், மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையாருக்கு தி மு கழக விருது வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அண்ணா அவர்கள் ஆற்றிய உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு, தி. மு. கழக விருது இன்று அளிக்கப்படுகிறது. மூதாட்டியார் அவர்கள் கடந்த 35 ஆண்டுக் காலமாக, இந்த நாட்டுக்கும் நமக்கும் ஆற்றியுள்ள அரும்பணிக்கு நாம் வழங்கும் இந்த விருது ஈடானதல்ல.

"மூதாட்டியாரின் பெரும் தொண்டிற்காக நாம் அவர்களுக்குக் காட்டும் மனம்கனிந்த நன்றியின் அறிகுறிதான் நாம் அளிக்கும் இந்தச் சிறு விருது.

"இந்த விருது, வெறும் சாதாரண மரப்பலகை ஒன்றில், சிறிது வெள்ளியைப் பதித்து—நமது 'பஞ்ச நிலை'க்கு ஏற்ப அளித்திருக்கிறோம்; ஆனால், நாம், நமது இதயத்தை, அந்த விருது அளிப்பதின் மூலம் மூதாட்டியாரிடம் தந்திருக்கிறோம்.

"மூதாட்டியார் அவர்கள் சமூக மறுமலர்ச்சிக்காக, கடந்த 35 ஆண்டுக் காலமாகப் பாடுபட்டு வருகிறார்கள். அவர்கள் பட்ட பாட்டிற்கு, நாம் செய்யக் கூடியதெல்லாம், அவர்கள், எந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டார்களோ அந்தக் கொள்கைகளைப் பரப்புவதேயாகும். அந்த வகையில் நாம் மூதாட்டியாருக்கு இங்கே கூடியிருக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களை, மூதாட்டியார் விரும்பிய கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிற இயக்கத் தோழர்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"பலருக்கு, தாங்கள் பாடுபட்ட கொள்கைகள், தாங்கள் வாழும் காலத்திலேயே கிடைப்பதில்லை. மூதாட்டியார் அவர்கள் பாடுபட்ட கொள்கைகளைப் பரப்பி வெற்றி காண ஒரு பெரும் போர்ப்படையே—இயக்கமே இன்று வளர்ந்திருப்பதை அவர்களுக்கு நாம் காட்டுகிறோம்.

"பலருக்கு இந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. பலர், தாங்கள் உருவாக்கும் கொள்கைகள், தங்கள் வாழ்நாளிலேயே வெற்றி பெறுவதைக் காண முடியாதவர்களாகி விடுகின்றனர்; அல்லது, அவர்கள் கொள்கைகளை ஏற்க நாடு பக்குவப் பட்டதாயிராது போய்விடுவதாயிருக்கலாம்; அல்லது, காலம் உரியதாயில்லாதிருக்கலாம்; ஆனால் மூதாட்டியாரின் வாழ்நாளில், அவரது கொள்கைகள் வெற்றிபெற்று வருவதைக் காண்கின்றார்கள்.

"வீரன் ஒருவன், தன் வாளின் கூர்மையை மட்டும் நம்பியிருப்பதில்லை. தன்னுடன், தன் பின்னால் ஒரு வீரர் படையிருந்தால் அதன் ஆற்றலையும்தான் நம்பியிருப்பான். அதுபோல், மூதாட்டியாரின் பின்னால், ஒரு பெரும் இயக்கம் இருக்கிறது.

"தம் வாழ்நாளில் தாங்கள் எடுத்துக்கொண்ட இலட்சியங்கள் 'கனவு'கள் ஈடேற முடியாதுபோய் விட்டவர்கள், மனம் சலித்து, உள்ளம் உடைந்துபோய்விட்டவர்கள் பலருண்டு; ஆனால் அந்த நிலை மூதாட்டியாருக்கு ஏற்படவில்லை.

"மூதாட்டியாருக்குப் பிள்ளைகள்—பேரன்மார்கள்—உற்றார் உறவினர் இவர்களை எல்லாம் காணும்போது ஏற்படும் மகிழ்ச்சி, இங்கே கூடியிருக்கும் இலட்சக் கணக்கானோரைக் காணும்போது ஏற்படக்கூடிய மகிழ்ச்சியைவிட அதிகமானதாயிருக்க முடியாது.

"காலஞ்சென்றுவிட்ட காந்தியார், தென்னாட்டில் இன்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு சமூகப் பணிக்காகப் பெண்களைத் தேடி அலைந்த போது, மூதாட்டியார்தான் அவர்களுக்குப் பட்டார். இது பழைய காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியும்; இன்று நம்மையெல்லாம் தாறுமாறாகப் பேசுகிற புதிய காங்கிரசாருக்குத் தெரியாது.

"அப்படி காந்தியார் காலத்திலிருந்து, 35 ஆண்டுகளுக்கு மேலாக, சமுதாய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு வருபவர்கள் மூதாட்டியார்.

"அவர்கள், பாடுபடுகிற அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை, நம்மிடையே இருந்தார்கள்—இருக்கிறார்கள்—இனியும் இருப்பார்கள் என்பது நமக்குப் பெருமை தரக்கூடியதாகும்.

"மூதாட்டியாரின் ஈடு [illegible] யற்ற பணி, அவர்களுக்கு [illegible] வயதாகிவிட்ட பிறகும் [illegible] நாட்டிற்குக் கிடைத்து [illegible] நமக்கு மேலும் [illegible] கிறது."

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—5—'56 சனி

விலை உயர்வைத் தடுக்கும் வேடிக்கை

ஏழை [illegible], உழைத்துப் பாடுபட்டு ஊதியம் பெற்றும், உணவு வாங்கப் பணம் போதாமல், வயிற்றைப் பிசைந்து நின்று அல்லற்படும் அளவிற்கு இன்று உணவுப் பொருள்களின் விலைவாசிகள் அளவு கடந்து உயர்ந்துவிட்டன; நாளுக்குநாள் உயர்ந்துகொண்டும் போகின்றன.

திடீரென்று ஏன் இவ்வகையாக உணவுப் பொருள்கள் விலை உயர்ந்துவிட்டன? இதைப்பற்றிய கவலை ஆளவந்தாருக்குச் சற்றேனும் தோன்றியதாகத் தெரியவில்லை. விலைவாசிகள் உயர்வால் அல்லற்படும் கூட்டம் அவர்களல்லவே!

உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதால், விலைவாசிகள் உயர்கின்றனவென்றால், அவ்வாறு ஏற்றுமதி செய்ய அனுமதி கொடாமலிருக்க ஆளவந்தார் ஏற்பாடு செய்கின்றனரா? இலங்கை அரிசி கேட்டால் தர முடியாதென்று பதில் கூறுவது மட்டும் போதாது; ஆனால் அரிசி கள்ளத்தனமாக ஆயிரக்கணக்கான டன்கள் வெளி போய்க்கொண்டிருக்கின்றனவா?—என்று கவனித்துத் தடை செய்வதும் இன்றியமையாத வேலையல்லவா?

கப்பல்களில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கவில்லையென்றால், இரயில் வண்டிகள் மூலம் வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றதா என்பதைக் கவனித்து, அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதா?

அப்படியும் நடைபெறவில்லையென்றால், வணிகர்கள் பதுக்கல் வேலையில் இறங்கி, மக்களைப் பட்டினியால் படுகொலை செய்யும் வேலையில் இறங்கியிருக்கின்றனரா என்பதைக் கவனித்து, அங்ஙனம் பதுக்கியவர் எவ்வளவு 'பெருந்தலை' ஆக இருந்தாலும், அவரை தண்டிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டனவா?

உணவுப் பொருள்களின்மீது பாங்கிக்காரர்கள் ஏராளமாகப் பணம் கடன் கொடுக்கத் தொடங்கியதனாலேயே, வணிகர்கள் விலையுயர்வை மனத்தில் கொண்டு, தங்கள் பண நெருக்கடியை பாங்கிகள்மூலம் தீர்த்துக்கொண்டு, தக்க நேரத்தில் விலைகளை உயர்த்திவிடுகின்றனர் என்றிருக்க, இதைத் தடுக்க ஆளவந்தார் இத்தனை நாள் முயலாமல் இருந்ததன் மர்மமென்ன? பாங்கிகள் இவ்வாறு அரிசிமீதும், நெல்மீதும் பணம தரக்கூடாதென்று ரிசர்வ் பாங்கி நேற்று விதித்த உத்தரவை, முதலிலேயே செய்யத் தவறியதேன்? இப்போதுகூட அரிசி, நெல் ஆகிய இரண்டினை மட்டும் குறிப்பிட்டுவிட்டு, மற்றவற்றைக் குறிப்பிடாமலிருப்பதால், மற்றப் பொருள்களின் விலைவாசிகள் உயர்வைப் பற்றி ஆளவந்தாருக்கு அக்கறையில்லையா?

வெளி இராச்சியங்களிலிருந்து இங்கு வரவேண்டிய உணவுப் பொருள்கள் ஏதேனும் தடைப்பட்டு விட்டதா? அதற்குக் காரணம் என்ன?—என்பவற்றைப்பற்றிக் கவனிக்கப்பட்டதா?

எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுவதால், எண்ணெய் விலை ஏறுகிறதென்பதை அறிந்து அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதா?

இராணுவப் பிரிவுத் தலைவர்கள் நேரடியாகக் கடைத் தெருவில் உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு அனுமதியளித்ததன் பயனாக—அவர்கள் உயர்ந்த விலை கொடுத்து வாங்கத் துணிந்ததன் பயனாக விலைவாசிகளை உயர்த்தி விற்க வணிகர்கள் முனைந்துவிட்டனர் என்று மக்களிடை உலவிவரும் வதந்தி உண்மையானதா? அப்படியாயின், அதைத் தடுக்க வழி செய்யப்பட்டதா?

அரசாங்கச் சேமிப்பில் இருக்க வேண்டிய தானியங்களின் அளவு குறைந்துவிட்டதாகவும், அந்த இரகசியத்தை அறிந்துகொண்ட வடநாட்டு வணிகர்கள் வழக்கம்போல் பதுக்கல் வேலையில் இறங்கி விலை உயர்வடையுமாறு செய்துவிட்டனரென்றும் நம்புவதற்கு இடமேற்படுமாறு செய்யப்பட்டிருக்கின்றதே! அப்படியில்லையெனில், சேமிப்பு நிலையை விளக்க ஆளவந்தார் முயன்றதுண்டா? வாங்க வேண்டிய காலத்தில் அரிசியை வாங்கிச் சேமிக்க ஆளவந்தார் தவறிவிட்டனர் என்ற குறைபாட்டை எப்படி நீக்கப் போகின்றனர்? நீக்க வேண்டிய அவசியமும் கவலையும் அவர்களுக்கு ஏது?

இவையனைத்தும உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வந்திருந்தால், உணவுப் பொருள்கள் திடீரென்று விலை ஏறிவிட வேண்டிய தேவையே இல்லையல்லவா?

விலைவாசிகளோ உயர்ந்த வண்ணமுள்ளன; உயர்ந்த நிலையிலிருந்து இன்னும் இறங்கியபாடில்லை. ஆனால் நாடாளவந்த நாயகர்கள் கோடையை நீலகிரியில் நிம்மதியாக—இன்பமாகக் கழித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு இன்ப வாழ்வு ஒன்றுதான குறிக்கோளே தவிர, நாடு எக்கேடு கெட்டாலும் இவர்கள் கவலைப்படமாட்டார்கள் என்று நாம் எண்ணினல் அதில் தவறு என்ன இருக்கமுடியும்?

அரிசி விலை ஏறிவிட்டது—மக்களுடைய வாங்கும் சக்தியை மீறிய அளவுககு விலை ஏறிவிட்டது—மக்கள் பட்டினியால், பசியால் மாளுகின்றனர் என்ற நிலை மீண்டும வந்த பிறகு ஆளவந்தார் அரிசி விற்க முன்வந்திருக்கின்றனர். ஆனால் அந்த அரிசியுடன், அரிசி விறபவர்கள் கூடச்சென்று, அதைச் சமைக்கும் வித்தையைக் கற்றுக்கொடுக்க வேண்டிய பரிதாபநிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. சிவில் சப்ளை கமிஷனர் வேறு, ஆங்காங்கு இந்த அரிசியைச் சமைக்கும் வித்தையைப்பற்றிக் கூட்டங்கள் கூட்டிப் பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது.

ஆளவந்தார், இந்த அரிசியைக் கூட்டுறவுச் சங்கக்கடைகள் மூலம் விற்பனைக்கு ஏராளமாக அனுப்பியபோதிலும், இது மிக மட்டரகமான அரிசியாதலின் வாங்குவாரில்லை என்று வணிகர்கள் தெரிந்துகொண்டனர். எனவே, உயர்ந்த விலைகள் இன்னும் இறங்காமலே இருக்கின்றன. மக்களோ, காசு கொடுத்து அரசாங்கத்தாரின் அரிசியை வாங்கிச் சென்று கூழாக்கிப் பாழாக்குவதைவிடச் சும்மாயிருக்கலாம் என்று நினைக்கின்றனர். அப்படியும் கடைத் தெருவில் நல்ல அரிசி பதின்மூன்றணவிற்குக் கிடைத்தால், ஆளவந்தார்கள் பதினொன்றரையணவிற்கு இந்த மட்டரக அரிசியை விற்க முன்வந்தபடியால், அரிசி வணிகர்கள் இன்னும் சற்று விலைகளை உயர்த்திக்கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது.

ஆளவந்தார்களுக்கு இத்தகைய மட்ட அரிசி எங்குக் கிடைத்தது? இத்தகைய குழைந்துபோகும் அரிசியாகப் பார்த்து வாங்குவதன் கருத்தென்ன? நல்ல அரிசியாக வாங்கி, இன்னும் குறைந்த விலையில் விற்பதற்கு ஏன் முயற்சி எடுக்கவில்லை?

எனவே, அரசாங்கம் இந்த வகையில் தக்க சமயத்தில் போதிய அக்கறை காட்டாமல், கோடை வெப்பத்தைக் கழிக்க நீலகிரி போகவும், தங்கள் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பூசலகளால் [illegible]த்தைச் செலுத்தவும், அடுத்து வரும் தேர்தலில் தங்கள் வெற்றிக்கு வேண்டிய வேலைகளைச் செய்தல் குறித்துச் சிந்திக்கவுமாக இருக்கும் தோழர்கள், மக்கள் நன்மையைக் கருத்தில் கொண்டு, வேலை செய்வதென்றால் அது நடைபெறக் கூடிய வேலையா? காங்கிரசுக்காரர்களின் ஆட்சிப் போக்கு, உணவு உற்பத்தியில் பஞ்சம ஏற்படாதிருந்தும், மக்கள் பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலையை உண்டாக்கிக் கொடுக்கத் தவறவில்லை என்பதாகவே இருக்கிறது.

பிரத்தியேகமாகக் கவனிககப்படுகிறதாம்!

புதுடில்லி, மே 17—

இந்திய அரசாஙகத்தின் துணை நிதி மந்திரி பி. ஆர். பகத், மாகலைவல சபையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில, திருவாசி பிரதேயேகமாகக் கவனிககப்படுமௌளதென்றும், அதனல் அப்பகுதியில் வேலையில்லாத திண்டாட்டம அடியோடு ஒழிந்துவிடும என்றும் குறிபபிட்டார்.

தேஷ்பாண்டே கைதானர்

ஐதராபாத், மே 17—

ஐதராபாத் சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவர் திரு. வி. டி. தேஷ்பாண்டே 'நானடட்' மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின்முன் 'பம்பாய் நகரத்தோடு கூடிய மகாராஷ்டிரம் தேவை' என்று சத்தியாக்கிரகம் செய்த போது அவரும், அவருடன் சேர்ந்து சத்தியாக்கிரகம் செய்த 33 பேர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் உடனடியாக நீதிபதியின் முன்னல் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒரு நாள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

பென்சிலின் ஊசியால் ஏற்பட்ட சாவு!

டாக்டர்களுக்கு எச்சரிக்கை

டோக்கியோ, மே 17—

டோக்கியோ பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவருக்கு ஒரு பல்லை எடுத்துவிட்டதையொட்டிப் பென்சிலின் ஊசி குத்தப்பட்டது. அதன் விளைவாக அவர் இறந்துவிட்டார். எனவே பென்சிலின் ஊசி குத்துவதில் டாக்டர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று ஜப்பான் டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த 3 ஆண்டுகளில் 100 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் பென்சிலின் ஊசி போடப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் பலர் இறந்துவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

செயற்கை மழை

உதகை அருகே பெய்தது

உதகை, மே 17—

உதக மண்டலத்திலிருந்து 17-வது மைல் தூரத்திலுள்ள முகுர்தி என்ற ஊரில் செயற்கை மழை உண்டாக்கப்பட்டது.

சென்னை அரசாங்க நீர்ப்பாசன இலாகா பிரதம எஞ்சினீயர் ஆனந்தராவும், மற்றும் சில நிபுணர்களும் உதகைப் பகுதியில் சில நாட்களாகச் செயற்கை மழை உண்டாவதற்குரிய சோதனைகள் செய்து புதன்கிழமையன்று முகுர்தி என்ற இடத்தில் செயற்கை மழை பொழியுமாறு செய்தனர்.

சில வகையான உப்புக்களை குண்டுக்களில் நிரப்பிப் பீரங்கிகளின் துணைகொண்டு பூமிக்கு அண்மையில் தாழ்ந்து செல்லும் மேகங்களைக் குறிபார்த்துச் சுட்டதின் பயனய் செயற்கை மழை பொழிந்தது என அறிவிக்கப்படுகிறது.

பம்பாய்—பாரிஸ் 'பஸ் சர்வீஸ்'

புதுடில்லி, மே 18—

பாரிசிலுள்ள ஒரு கம்பெனி, பாரிசிக்கும்—பம்பாய்க்கும் இடையே பஸ் போக்கு-வரத்து ஏற்பாடு செய்துள்ளனர்.

பாரிசிலிருந்து புறப்பட்ட முதல் பஸ் பம்பாய்வந்து பாரிசுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் புதுடில்லியில் தங்கியுள்ளது.

பாரிசிலிருந்து பம்பாய்வந்து இந்தியாவில் 10 நாள் தங்கித் திரும்பிப் பாரிசுக்குப் போய்ச்சேர ஒரு நபருக்கு ஆகும் மொத்தச் செலவு 600 பவுன்கள்தானும் இச்செலவிலேயே உணவு வசதிகளும் செய்து தரப்படும்

'இந்தி தேவையில்லை'

—விேனுபா பாவே

சென்னை, மே 17—

இன்று காலையில் சென்னையில் ஆச்சாரியா விேனுபாவாவே நடத்தயபி ரார்த்தனைக் கூட்டத்தின் போது 'இந்தி தேவையில்லை' என்று குறிபபிட்டார்.

வழக்கமாக பிரார்த்தனைக் கூட்டத்தின்போது, இன்று செய்யப் போகும் செயல்கள் குறித்து, கூட்டம் பேசப்படுகின்ற இடத்திற்கேற்ப வட்டார மொழியிலும், இந்தியிலும் அறிவிக்கப்படும். அதன்படியே இங்கு இந்தியில் அறிவிக்கத் தொடங்கியபோது, விேனுபாபாவே 'இந்தி தேவையில்லை; தமிழிலேயே அறிவிக்கலாம்' என்று குறிப்பிட்டாராம்.

எகிப்து—தேசீயசீன தொடர்பு அறுபட்டது

பாய்பே, மே 17—

எகிப்து நாடு மக்கள் சீனவை அங்கீகரித்துவிட்ட காரணத்தால் தேசிய சீன எகிப்துடன் வைத்திருந்த அரசியல் தொடர்புகளை அடியோடு அறுத்துக்கொண்டது.

நெய்வேலித் திட்டத்திற்கு 68 கோடி ரூபாய்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுமாம்

புதுடில்லி, மே 17—

தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலைக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலைத் திட்டத்திற்கு 52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுச் செயலாற்றப்படுகையில் ஏற்படும் வளர்ச்சியை யொட்டி மேலும் சில கோடி ரூபாய் செலவழிக்கப்படக்கூடும். ஆகமொத்தம் 68 கோடி ரூபாய் வரையில் செலவழிக்கப்படலாம் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

20,000 அஞ்சல் நிலையம் அமையும்!

புதுடில்லி, மே 17—

20,000 அஞ்சல் நிலையங்களும் 1,400 தந்தி அலுவலகங்களும், 1,200 பொது டெலிபோன் அலுவலகங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் காலத்தில் திறக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

1,80,000 டெலிபோன்கள் அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது

இவற்றிற்கும், வானொலி நிலைய வளர்ச்சிக்குமாக ரூ. 76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன் பிடிக்கும் பயிற்சி நிலையம்

மாதம் ரூ. 50 உபகாரச் சம்பளம்

திருவனந்தபுரம், மே 17—

கொச்சி மாநகரத்தில் மீன்பிடிப் பயிற்சி நிலையம் ஒன்றினை, ஜூன் 1-ந் தேதி இந்திய அரசாங்கம் ஏற்படுத்தும். புதியமுறையில் மீன் பிடிப்பது பற்றிய பயிற்சி இங்கே 6 மாத காலம் தரப்படும். தொடர்ந்து ஐந்தாண்டுகள் மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருந்தவர்களே இந்நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர் பயிற்சியாளருக்கு மாதம் ரூ.50-ம் வேறுசில அலவன்சுகளும் தரப்படும். தூத்துக்குடியில் இது போன்றதொரு பயிற்சி நிலையம் இம்மாதம் 1-ந் தேதி துவக்கிவைக்கப்பட்டது.

26,458 அடி உயரமுள்ள இமாலயச் சிகரம்!

ஜப்பானிய மலையேறும் குழுவினர் எட்டிப் பிடித்தனராம்!

காட்மண்டு, மே 17—

26,458 அடி உயரம் உடையதும், இமயமலையிலேயே உயரத்தில் மூன்ருவதாகக் கூறத்தக்கதுமான மானஸ்லு என்ற சிகரத்தின் உச்சியை ஜப்பானிய மலையேறும் கோஷ்டி ஒன்று அடைந்துவிட்டது. இக்கோஷ்டியின் தலைவர் 62 வயதுடைய ஒய். மேக்கி என்பவராவார் இக்கோஷ்டியில் மொத்தம் 12 உறுப்பினர்கள் உள்ளனர்.

மலிவான இந்தியத் துணிக்குப் பிரிட்டன் வரவேற்பு

மாஞ்செஸ்டர், மே 18—

84,000 தொழிலாளர்களைக் கொண்ட சங்கமாகிய பிரிட்டனிலேயே மிகப் பெரிய பருத்தித் தொழிற் சங்கம், இன்று, இந்தியாவிலிருந்து விலை மலிவான இந்தியப் பருத்தித் துணிகளைப் பிரிட்டனில் இறக்குமதி செய்வது குறித்து இந்திய நெசவுத் தொழில் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்று ஆலோசனை செய்தது.

‘எதிர்காலம் தி. மு. கழகத்திற்கு ஓர் சோதனையாகும்’

‘உழவர் பெருமக்கள் நலனுக்கு ஆவனசெய்ய தோழர்கள் முன்வரவேண்டும்’

ஜி. பி. சோமசுந்தரம் முழக்கம்

தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டுத் திறப்பாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் சொற்பொழிவின் முதற் பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

“நம் கழகம் துவங்கிய நாளிலிருந்து நாம் பல பெரிய போராட்டங்களை நடத்தவேண்டிய அவசியத்திற்கு ஆளாகினோம். நாம் சாதித்துள்ள காரியங்கள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கூறி உங்கள் காலத்தை வீணாக்க விரும்பவில்லை; ஏனெனில், நாம் சாதித்தவை பெருமைப்படக்கூடியதே! எனினும், அவை கொஞ்சம்; நாம் சாதிக்கவேண்டியவை இன்னும் ஏராளம். உங்கள் சிந்தனை அனைத்தையும் அதில் செலுத்துமாறு வேண்டுகிறேன்.

“நாம் மிக மிக நெருக்கடியான காலத்தில் இங்கு கூடியிருக்கிறோம். இது வெறும் சம்பிரதாயத்துக்காகக் கூறப் படுவது அல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

“இந்நாட்டு அரசியலாரும், இவ்வுபகண்டத்தின் அரசியலாரும் நம்முடைய ஒவ்வொரு செயலையும் மிக மிகக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

“இந்தியப் பேரரசின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் துவக்க இருக்கும் நாட்களில் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பேசுகிற எல்லா இந்தியக் காங்கிரஸ் தலைவர்களும் சரி, இம்மாநில காங்கிரஸ் தலைவர்களும் சரி, அடுத்து வரப்போகிற பொதுத் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு, அந்தப் பின்னணியின் பேரில்தான் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நாடு முழுமையும் பலமான பிரச்சாரம் செய்துவருகின்றனர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தவர்கள் தென்னாட்டை எவ்வளவு அலட்சியப் படுத்தியிருக்கின்றனர் என்பதை நாம் மட்டும் கூறிக்கொண்டிருக்கவில்லை.

இந்நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும், தொழில் அனுபவம் பெற்றவர்களும், பொருளாதார நிபுணர்களும்கூட மிகமிக வன்மையாக மத்திய அரசாங்கத்தினர் போக்கை கண்டித்து வருகிறார்களெனினும் மத்திய அரசாங்கம் எதற்கும் அசைந்து கொடுக்காமல் தன் போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறது.

“ஐந்தாண்டுத் திட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் பலாபலன்களைப் பற்றி மாநாட்டில் பலர் பேச இருக்கிறார்களாகையினால், அதைப் பற்றிய செய்தியை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

“ஆயினும் ஒன்று மட்டும் கூறவிரும்புகிறேன். நாம் நம்முடைய லட்சியமாகிய திராவிட நாட்டை பெறுதவரை வடக்கிலுள்ளவர்களால் இப்படிப்பட்ட அவமதிப்புகள் பலவற்றை பெற்றுத் தானகவேண்டும்.

“ஆரிய - திராவிட போராட்டங்களைப் பற்றி சில சொல்ல ஆசைப்படுகிறேன். ‘ஆரிய இனம் வேறு; திராவிட இனம் வேறு’ என்று நம்முடைய இயக்கத் துவக்க நாட்களிலிருந்து தக்க ஆதாரங்களோடு நாடு முழுமையும் நாம் பிரச்சாரம் செய்துவருகிறோம். நம் இயக்க வளர்ச்சி கண்டு, பீதி அடைந்திருப்போர்களில் நமது மாநில கவர்னர் திரு பிரகாசா அவர்களும் ஒருவராவார். ஆரிய—திராவிட இனப் பிரச்சினைகளை சர்வகலாசாலை அந்தஸ்தில் ஆராய்ச்சி நடத்தவேண்டுமென்று அவர் அண்மையில் வெளியிட்டுள்ள அபிப்பிராயத்தை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். அவர்களாகவே சில ஆராய்ச்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து, ‘ஆரிய—திராவிட இனப் போராட்டமென்பதெல்லாம் வெறும் அபத்தம்; வேண்டுமென்றே சிலரால் துஷ்பிரச்சாரத்துக்காக உபயோகிக்கப்படுகிறதே அல்லாது இதற்கு ஆதாரம் இல்லை; சரித்திரச் சான்று இல்லை’ என்று அவர்களால் முடிவுகட்ட சொல்வதற்கு பிரயத்தனம் நடக்கிறதோ என நான் ஐயுறுகிறேன். அண்மையில் இந்த அடிப்படையில் ‘இந்து’ பத்திரிகையில் ஒருவர் ஒரு கடிதம் எழுதியிருந்ததையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள் என நம்புகிறேன். ஆகவே, நமது கழகத்தைச் சார்ந்த சரித்திரம் பயின்ற தோழர்கள் அனைவரும் நம் இனப்போராட்டத்தின் ஆதாரங்கள் யாவற்றையும் திரட்டிப் பொதுமக்கள் முன்னும், வெளியுலகிலும் வைக்க வேண்டியது நம்முடைய நீங்காக் கடமையாகும்.

“நம்முடைய இயக்கம் இன்று தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரவியிருக்கின்றது; அது மட்டுமல்ல — கன்னட, தெலுங்கு, மலையாள நாட்டிலும் நம்முடைய கிளைகள் இருக்கின்றன; ஏன்? வடநாட்டில் பம்பாய், ஆமதாபாத் போன்ற இடங்களிலும் நம் கிளைகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் நடைபெற்றிருப்பது போன்ற பலமான பிரச்சாரம் மற்ற மூன்று மொழிப் பிரதேசங்களில் நாம் இன்னும் செய்யவில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டு தானாக வேண்டும். ஆயினும் நமக்கிருந்த பிரச்சார வசதிகள் இந்த அளவுக்குத்தான் முடிந்தது.

“எதிர்காலம் நமக்கு ஒரு பெரிய சோதனைக்காலமாக இருக்குமென்பதற்கு பல சூசனைகளை நாம் இப்போது பார்க்கிறோம். பலமாக வேரூன்றிய ஒரு அரசியல் கட்சியாக நாம் திகழ்ந்த போதிலும், அரசியலின் நேரடி நடவடிக்கையாகிய தேர்தலில் நாம் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்ததை மற்ற அரசியல் கட்சிகள் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளப்பார்க்கின்றன. இம் மாநில முதலமைச்சர் கனம் காமராசர், நாம் ஒரு அரசியல் கட்சியே அல்ல என்று கூறித் திரிகிறார்.

“நம் கழகத்தைப் பொருத்தவரை மாணவர்கள்—குறிப்பாககல்லூரி மாணவர்கள் நம் கழகக் கருத்துக்களை நன்கறிந்து கொண்டும், அதற்கென ஒரு தனி மாணவர் கழகத்தைப் பெற்றிருக்கின்றனர்; அவர்களின் ஒத்துழைப்பை நன்கு பயன்படுத்திக் கொள்வது நமது நீங்காக் கடமையாகும்.

“நம் திராவிட நாட்டில் பெரும்பாலும் 100-க்கு 80 பேர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்களாய் இருக்கின்றனர்; இருப்பினும், இவர்களின் குரல் ஆளவந்தார்களின் காதில் படும்படியான அளவிற்குப் போதிய கல்வி அறிவும், கிளர்ச்சிசெய்யக்கூடிய அளவு அமைப்பு உடையவர்களாக இல்லை; எனவே அவர்களை ஏனைய அரசியல் கட்சிக்காரர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

“பொதுவாக திராவிட நாடு வடநாட்டினருக்கு சந்தையாக்கப் பட்டுவிட்டிருக்கின்றது; இந்நிலையில், தொழில்துறையில் முன்னேற முடியாமல் இருக்கின்ற நாம், உழவுத் துறையிலாவது நம்மாலானவற்றை அரசாங்கத்தினிடமிருந்து பெற முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

“குறிப்பாக மின்சார வினியோகத்தை அரசாங்கம் ஒரு வியாபாரப் பொருளாக்கிக்கொண்டு நாட்டின் நலனைக் கருதாமல் குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட அளவு மின்சாரம் எடுத்துக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் ஒப்பந்தத் தொகையை கட்டிவிட வேண்டுமென்று நிர்ப்பந்தத்தின் மூலம் உழவுத் தொழிலை இயந்திரமயமாக்குவதிலிருந்து தடை செய்துகொண்டிருக்கிறதென்பதை நாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இருப்பினும், தங்களை க்ஷேமநல சர்க்கார் எனவும், நாட்டை விஞ்ஞானப் பாதையில் செலுத்திக் கொண்டிருப்பதாகவும் சொல்லுவது மிகவும் வெட்கப்பட வேண்டியதொன்றாகும்.

“நம் நாட்டிலுள்ள உழவர்கள் 100-க்கு 80-க்கு மேற்பட்டவர்கள் கடனாளிகளாகவே இருக்கின்றனா என்பதை ஒப்புக்கொண்டு புள்ளி விவரம் கொடுத்திருக்கின்றனர். எனினும், உழவர்களுக்குக் கடனுதவி செய்வதாகப் பாசாங்கு செய்கிறது. உதாரணமாக, நில அடமான பாங்கிகள், நிலத்தை மதிப்பீடு செய்யும் முறையே மிகவும் விசித்திரமானது; ஒரு நிலத்தை இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மதிப்பை வைத்துக் கொண்டு கடன் அளிக்கிறார்கள்; இதனால் உழவர்கள், தங்கள் தேவைக்கேற்ற பணவசதியை அடைய முடிவதில்லை; ஆகவே, நில அடமான பாங்கிகளின் கடன் கொடுக்கும் விதி முறைகளைத் தளர்த்த வேண்டுமென்றும், கடன் விரைவில் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதும், மதிப்பீடு முறையை தற்கால மதிப்பின்படி கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கத்தைத் தூண்டுவதும் நம்முடைய நீங்காக் கடமையாகும்; எனவே, உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் நலனை உத்தேசித்து, நம் கழக ஆதரவில் ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தவேண்டிய நிலையிலிருக்கிறோம் என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன்.”

‘சமூக நிலையை மாற்றியமைக்க மக்களின் புரட்சி தேவை’

‘சாதிமுறை ஒழிந்தாலன்றி நாடு நல்ல நிலையை எய்தாது’

மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் விளக்கம்

ஜோர்ஹாத், மே 16—

“இந்தியாவில் சாதி முறையுள்ளவரையில் சமூகத்திலிருந்து தீண்டாமையை ஒழிக்கமுடியாது. சாதி பாகுபாட்டை அறவே தொலைத்தாலொழிய நாம் நம் நாட்டை வளம் நிரம்பியதாக — மகிழ்ச்சியுள்ளதாக ஆக்க முடியாது”

என்று, மத்திய தபால்—தந்திப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம், இங்கு தாழ்த்தப் பட்டோர் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது :—

‘நாம் அரசியலில் விடுதலையடைந்தது உண்மைதானென்றாலும், இன்னும் சமூக விடுதலை அடையவில்லை. தீண்டாமையும், சாதி வேற்றுமையும் சமூகத்திலுள்ள வரை நாம் சோசலிசத்தையோ, மக்களாட்சி முறையினையோ ஏற்படுத்திவிட்டோம் என்று பேசுவதில் ஏதும் பயனில்லை. சமூகத்தினை மாற்றியமைக்க ஒரு புரட்சியை மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

“தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு இதுவரை செய்துள்ள முயற்சிகள் போதுமானதல்ல என்பதனை உணருகிறேன். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தாழ்த்தப்பட்டோரின் தரத்தை உயர்த்த அரசியலார் அதிக முயற்சிகள் செய்வார்கள்.”

இலங்கையில் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதி!

1960-லிருந்து சிங்களமே ஆட்சி மொழியாகும்

கொழும்பு, மே 17—

இலங்கையில் 1960-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் சிங்கள மொழி மாத்திரம்தான் அரசாங்க மொழியாக விளங்கும்; அப்போது தமிழும், ஆங்கிலமும் அரசாங்க மொழிகளாயிராது.

இது சம்பந்தமான மசோதா அடுத்த மாதத் தொடக்கத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

இப்போது இலங்கையில் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள மக்கள் கூட்டணி நியமித்த மொழிக் குழுவில் இம்முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழுவுக்குப் பிரதமர் பண்டாரநாயகா தலைமை வகித்தனர்.

அரசாங்க அலுவல்களில் சேருவதற்கான தேர்வுகளில் தமிழும், ஆங்கிலமும் படித்தவர்கள் 1967-ம் ஆண்டுவரையில் தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ கேள்விகட்கு விடை எழுதலாமாம்; ஆனால் அவர்கள் சிங்கள மொழியையும் நன்கு பயின்றிருக்க வேண்டுமாம். 1967-ம் ஆண்டிற்குப் பிறகு சிங்கள மொழியில்தான் அரசாங்க அலுவல்கட்குரிய தேர்வுகள் நடைபெறுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

மாநில வாரி செலவினங்கள்

புதுடில்லி, மே 15—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவான அறிக்கைப்படி கீழ்க்காணும் வகையில் பல்வேறு மாகாணங்களுக்கும் செலவுத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது :—

	கோடி ரூபாய்
ஆந்திரா	119·0
அஸ்ஸாம்	57·9
பீகார்	194·2
பம்பாய்	266·1
மத்திய பிரதேசம்	123·7
சென்னை	173·1
ஒரிஸா	100·0
பஞ்சாப்	125·3
உத்திரப்பிரதேசம்	258·1
மேற்கு வங்காளம்	153·7
ஐதராபாத்	100·2
மத்திய பாரத்	67·8
மைசூர்	80·6
பெப்சு	36·8
இராஜஸ்தான்	97·4
சௌராஷ்டிரம்	47·7
திருவாங்கூர்-கொச்சின்	72·0
ஜம்மு-காஷ்மீர்	33·0
ஆஜ்மீர்	7·9
போபால்	14·3
குடகு	3·8
டில்லி	17·0
இமாசலப் பிரதேசம்	14·7
கட்சு	7·9
மணிப்பூர்	6·2
திரிபுரா	8·5
விந்தியப் பிரதேசம்	24·9
அந்தமான் நிக்கோபார்	5·9
வடகிழக்கு எல்லைப் பகுதி	9·5
புதுச்சேரி	4·8
மொத்தம் ரூ.	4,800·0

தனிப்பட்ட தொழிலதிபர் செலவிடும் 2,400 கோடி ரூபாய் கீழ்க்காணும் முறையில் செலவிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது :—

	கோடி ரூபாய்
தொழிற்சாலை விரிவு	575
இயந்திரங்கள் போக்கு - வரத்து (இரயில்வே நீங்கலாக)	125
புனரமைப்பு	1000
விவசாயம், கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள்	800
இருப்புக்கள்	400

ரூ. 35 இலட்சம் அதிகப்படி ‘போனஸ்’

1 இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பெறுவர்

கோயம்புத்தூர், மே 16—

1952, 1953, 1954 ஆண்டுகளுக்கு ‘போனஸ்’ வழங்குவது குறித்து இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசைச் சேர்ந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தென்னிந்திய ஐக்கிய தோட்ட முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளதாம்.

இதனால் ரூ. 35 இலட்சம் அதிகப்படி போனசாக தொழிலாளருக்கு வழங்கப்படுமாம். 1956 ஜூலைத் திங்கள் 1-ந் தேதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ போனசுகள் வழங்கப்படுமாம்.

இதன் மூலம் சென்னை மாநில தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் நன்மை பெறுவர் எனத் தெரியவருகிறது.

காங்கிரஸ்காரர்கள் சத்தியாக்கிரகம்!

பம்பாய், மே 16—

ஜூன் முதல் வாரத்தில் பம்பாயில் நடைபெறவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தின்போது, பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்துடன் இணைக்கப்படவேண்டும் என்பதற்காகச் சத்தியாக்கிரகம் செய்வது என்று சம்யுக்த ஆதரவான—மகாராஷ்டிர காங்கிரஸ்காரர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டின் நிர்வாகக் குழுவில் இத்தீர்மானம் நிறைவேறியது.

கன்னிமாடத்தின் மீது விமானம் வீழ்ந்தது

15 பேர் உயிர் துறந்தனர்

ஒட்டாவா, மே 16—

நேற்று இரவு ஒட்டாவாவுக்கு அருகாமையில் ஒரு கன்னிமாடத்தின்மீது 33,000 அடி உயரத்திலிருந்து ஒரு ஜெட் விமானம் விழுந்தது. அதனால் கன்னிமாடம் தீப்பற்றிக் கொண்டது. அக்கட்டிடத்தில் சுமார் 35 பேர் இருந்தனர். அவர்களில் 14 [illegible] மார்களும் ஒரு [illegible] உயிர் துறந்தனர்.

காங்கிரசுக் கோட்டையில் பதவி வெறி!

கக்கனிடம் நம்பிக்கையில்லையாம்!

காமராசரைக் கவிழ்க்கச் சதித் திட்டம்?

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியில், வழக்கம்போல் பதவிவெறி தலைக்கேறி இப்போது உச்சநிலைக் கட்டத்தை அடைந்துவிட்டது. தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் துணைத் தலைவர் கே. எஸ். வெங்கட கிருஷ்ண ரெட்டியாருக்கும் இப்போதைய தலைமைப் பதவி பிடிக்கவில்லை.

எனவே, கட்சியில் சிலர் இப்போதுள்ள இளைஞர்களுடன் சேர்ந்துகொண்டு சி. இராசகோபாலாச்சாரியின் ஆசியைப் பெற்று, காமராசருக்கும்—கக்கனுக்கும் எதிராக வேலை செய்துவருகின்றனர் இவ்விருவரையும் எப்படியேனும் பதவியிலிருந்து கவிழ்த்துவிட வேண்டுமென்பதில் இவர்கள் மிகத் தீவிரமாக முனைந்து வேலை செய்துகொண்டிருக்கின்றனர்.

இந்த எதிர்ப்புக் குழுவின் தலைவராக இருந்து வேலை செய்யும் எஸ் எல். கரையாளர் எப்படியாவது தாம் இழந்த தலைமைப் பதவியைப் பெற்றுவிட வேண்டுமென்று பெருமுயற்சி செய்கிறார்; ஓமாந்தூர் ரெட்டியாரை மீண்டும் கட்சிக்கு வந்து பொறுப்பேற்குமாறு அழைத்திருப்பதாகவும் தெரிகிறது. 'கீழ்த்தரமான அரசியல் சூழ்ச்சிகள்' மலிந்துவிட்டனவென்று கூறிப் பதவியை விட்டொழித்து விலகிச் சென்ற ஓமாந்தூரார், மீண்டும் அரசியல் மேடையை நாடுவார் என்பது ஐயப்பாட்டிற்குரிய செய்தி. மேலும், கரையாளர், ஒரு பணக்கார வணிகரின் பண உதவி பெற்று, அவருடைய கையாளாக இருப்பதாகத் தெரிவதால் ஓமாந்தூரார் அரசியலில் புகுவது இயலாதது என்று சிலர் கூறுகின்றனர்.

கரையாளரின் முயற்சியை இராசகோபாலாச்சாரியின் ஆதரவாளர்கள் ஆதரிப்பதாகத் தெரிகிறது. காமராசரின் அமைச்சர்களுள் இருவர்கூட இந்த எதிர்ப்பியக்கத்தில் பங்குகொண்டவர்களாக இருக்கின்றனர் என்று தெரிகிறது. காமராசரைக் கவிழ்க்கும் சூழ்ச்சியாளருள் தாம் ஒருவராக இருக்கமுடியாதென இராசகோபாலாச்சாரி கூறினுரெனினும், அக்கூட்டத்தினருக்குத் தம் ஆசியை நல்கியிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கக்கன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்காகத் தமிழ் நாடு காங்கிரசுத் தனிக்கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு தூண்டுவது என்று கரையாளர் கோஷ்டி முடிவு செய்திருக்கிறது.

காமராசரின் துணைவரான கக்கனைக் கவிழ்த்துவிட்டால், தம் போராட்டத்தில் பாதிப் பங்கு வெற்றி என்று கரையாளர் கோஷ்டியினர் கருதுகின்றனர்.

—17-4-56ல் வெளிவந்த 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில இதழில், 'சென்னைச் செய்திக் கடிதத்'தில் மேற்குறித்தவாறு காணப்படுகிறது.

சுற்றுப்புற இரயிலில் அதிகக் கூட்டமேன்?

'சீசன்' டிக்கெட் உள்ளவர்களே பெரும்பாலும் காரணமாம்!

புதுடில்லி, மே 17—

பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங்களின் சுற்றுப்புறத்தில் ஓடுகின்ற இரயில் வண்டிகளில் அதிகமான கூட்டம் இருப்பதற்கு, 'சீசன் டிக்கெட்' வாங்கிப் பிரயாணம் செய்கின்றவர்கள்தான் பெரும்பாலும் காரணம் என்றும், அவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை தடவை பிரயாணம் செய்வது என்று வரையறுக்கப்படவில்லை என்றும், ஒருவர் பிரயாணம் செய்த பிறகு அவருடைய 'சீசன் டிக்கெட்'டைக்கொண்டே வேறொருவரும் பிரயாணம் செய்கின்ற மோசடியும் உள்ளதென்றும் இரயில் அதிகக் கூட்டத்தைக் குறைப்பதற்குரிய வழிகளைப் பரிசிலனை செய்வதற்கென நியமிக்கப்பட்ட பிரத்தியேகக் குழு அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

சீன படையுடன்

'மடத்து வீரர்' கைகலப்பு!

சீனப் பொதுவுடைமை அரசாங்கம், தங்கள் மதப் பழக்க வழக்கங்களிலும், சடங்குகளிலும் தலையிடலாம் என்ற அச்சம் காரணமாகக் கடந்தவாரம், வடகிழக்குத் திபேத்திலுள்ள கோலாக் மாவட்டத்தில், மிமாங் மடாலயத்தைச் சேர்ந்தவர்கள் அம்மாவட்ட எல்லையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சீனப் படையினரைத் தாக்கிச் சிலரைக் கொன்றுவிட்டார்களெனச் செய்தி ஒன்று கூறுகிறது.

இதன் பயனாகச் சீன இராணுவப் படையினர், மடாலயப் புரட்சிக்காரர்களைத் தாக்கி அடக்கிவிட்டதாகத் தெரிகிறது. இதனால் மடாலயத் தரப்பில் சிலர் கொல்லப்பட்டனர். இதனால் அந்தப் பகுதியில் அமைதி குறைவு ஏற்பட்டுள்ளது. சீனப் படையினரைத் தாக்கக் காரணமாயிருந்த புரட்சித் தலைவர்கள் ஓடி ஒளிந்துவிட்டனர் சீனர்கள் சில கிராமங்களுக்குக் கூட்டு அபராதம் விதித்திருக்கின்றனர்.

தேர்தல் செலவுகள்

கணக்கு வைக்க வேண்டுமென மக்கள் சபை முடிவு

புதுடில்லி, மே 17—

அங்கீகாரம் செய்யப்பட்ட அரசியல் கட்சிகள், தாம் தேர்தல்களில் நிறுத்திவைக்கும் அபேட்சகர்களுக்கு ஆதரவாகத் தம் விருப்பப்படி கணக்கே வைக்காமல் செலவு செய்யக்கூடாது என்று, மக்கள் சபையில், கடுமையான விவாதத்திற்குப் பிறகு முடிவு செய்யப்பட்டது.

'அரிசி சேமிப்பு மீது முன்பணம் கொடுக்காதே'

ரிசர்வ் பாங்கியின் அறிக்கை

பம்பாய், மே 17—

இந்திய ரிசர்வ் பாங்கி, நெல், அரிசி சேமிப்பின்மீது முன்பணம் கொடுப்பதைக் கட்டுப்படுத்தும்படி மற்ற பாங்கிகளுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது. அரிசி விலை அளவுக்கு மீறி ஏறுவதைத் தடுக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது

கல்லூரிக்கு வர மாணவர்கள் மறுப்பு!

திருவனந்தபுரம், மே 18—

திருவனந்தபுரம் ஆயுர்வேத மருத்துவர் கல்லூரியில ஆயர்வேத மருத்துவம் படிக்கும் மாணவர்கள், தங்கள் படிப்பு முடிந்தபின், ஆயுர்வேத மருந்துகளுடன், நவீன கால மருத்துவ முறையையும் அனுசரிக்க அனுமதி தரவேண்டுமென்று கோரினார்கள். அரசாங்கம் இதற்கிணங்க மறுக்கவே, அக்கல்லூரியிலுள்ள 240 மாணவர்களும், கல்லூரிக்கு வராமல் நின்றனர். இதனால். கல்லூரி 2 மாத காலம் மூடப்பட்டிருந்து, புதனன்று திறந்தபோது மூன்று மாணவர் தவிர, மற்றெவரும் கல்லூரிக்கு வரவில்லை.

********-*-********

மாநில மாநாடு

20—5—56 நிகழ்ச்சிகள்

காலை	7-30 } 8-30 }	—பிரதிநிதிகள் கூட்டம்
,,	9-00	—தீர்மானங்கள் நிறைவேற்றல்
பகல் மாலை	1-30 | 3-30 |	- இடைவேளை
,,	3-30	—தீர்மானங்கள் நிறைவேற்றல்
,,	6-00	—அறிஞர் அண்ணு சிறப்புரை
இரவு	7-30	-தலைவர் முடிவுரை
,,	8-00	—நன்றியுரை
	8-30 | 10-00 |	- இடைவேளை
,,	10-00	—'சுமை தாங்கி' நாடகம்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

-************** *-*

'தமிழகத்தில் தமிழே அரசியல் மொழியாகும்'

'மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டதும் ஏற்பாடு செய்யப்படும்'

கோயம்புத்தூர், மே 17—

"மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டவுடனேயே சென்னை மாநிலத்தில் தமிழையே அரசியல் மொழியாக ஆக்குவதற்கு ஆவன செய்யப்படும்,"

என்று, சென்னை கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம், கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாத் தேசிய மொழிகளும் ஒரொழுங்கான முறையில் வளர்ச்சி பெறுதல் வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கையை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளல் வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசாங்கம் இதை நன்கு உணர்ந்துவிட்டதென்றும், இது சம்பந்தமான திட்டங்கள் குறித்துத் தம் கருத்துக்களை வழக்குமாறு மாநில அரசாங்கங்கட்கு வேண்டுகோள் விடுத்துள்ளதென்றும், இது குறித்துத் திட்டமானதொரு முடிவுக்குவர ஆவன செய்வதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் இயம்பினார்.

வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்

20—5—56 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், புலவர் பு செல்வராசு அவர்கள், 'திருக்குறளின் வான் சிறப்பு' என்ற அதிகாரத்தை விளக்கிச் சொற்பொழிவாற்றுவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

20—5—56 ஞாயிறு மாலை 5 மணிக்கு, மேற்படி சங்க ஆதரவில், பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில் 'அகப்பொருள்' என்னும் பொருள் பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திரு. தொ. ரா. ஜெயராமன் சொற்பொழிவாற்றுவார்.

குறள் வகுப்பு

வடசென்னை குறள்நெறிக் கழக சொற்பயிற்சிக் கூடத்தில் 20-5-56 காலை 9 மணியளவில் புலவர் கா. ஆனந்தன் 'சொல்வன்மை' என்ற அதிகாரம் நடத்துவார்.

சூளை நகர இளைஞர் கழகம்

20—5—56 காலை 8 மணிக்கு திரு. பி. பக்கிரிசாமி (பிள்ளை) எம் எல்.ஏ., தலைமையில், சென்னை-சூளை கல்யாண மேஸ்திரி தோட்டம், குமாரசாமி ராஜபுரம் ஆகிய இடங்களில் சுகாதாரப் பிரச்சாரமும், இலவச பால் வினியோகமும் நடைபெறும்.

இலங்கை தேயிலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

10,000 தொழிலாளர் பங்கு கொண்டனர்

துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் மரணம்

கொழும், மே 18—

இலங்கையில் பல்வேறு தேயிலைத் தோட்டங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களில் ஏறக்குறைய 10 000 பேர் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம். மேலும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று மத்திய இலங்கையில் உள்ள தியாகமாவ் என்ற இடத்தில் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் மீது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அதனால் ஒரு தொழிலாளி இறந்தார்; மூவருக்குப் படுகாயமேற்பட்டது

தேயிலைத் தோட்டத்திற்குச் சென்றுகொண்டிருந்த விசுவாசம்(?) உள்ள தொழிலாளர்களைத் தடை செய்வதற்காக வேலை நிறுத்தம் செய்கின்றவர்கள் பெரும் கற்களை உருட்டித் தள்ளினார்களாம். அதனாலேயே போலீசார் சுட நேர்ந்ததாம் —

இன்று இலங்கைப் பிரதிநிதிகள் சபையில் இது குறித்துக் கேட்கப்பட்ட கேள்விகட்குப் பிரதமர் பண்டாரநாயகா பதில் சொல்கையில் நாளைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசில் உள்ள இரண்டு பிரிவுகளின் தலைவர்கள், தொழில் இலாகா அதிகாரிகள். முதலாளிகள் ஆகியோரின் மாநாடு ஒன்று கூட்டி வேலைநிறுத்தம் செய்வதற்கும், துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படியான சூழ்நிலை ஏற்பட்டதற்கும் காரணமாயிருக்கும் தகராறுகளைத் தீர்த்து நல்ல முடிவுக்கு வருவதற்கு ஆவன செய்ய ஏற்பாடு செய்துள்ளதாகக் கூறினர்.

இந்த வேலை நிறுத்தத்தை எ. அஜீஸ் என்பவர் முன்னின்று நடத்துகிறார்.

இத்தொழிலாளர்கள் தங்களின் சங்கங்களை அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று கோரியே வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

திரு எஸ். தொண்டமான் தலைமையில உள்ள தொழிலாளர் சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. எ. அஜீஸ் அவர்களைப் பின்பற்றும் தொழிலாளர்கட்கும், திரு. எஸ். தொண்டமான் அவர்களைப் பின்பற்றும் தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு தான் இவ்வேலை நிறுத்தத்திற்குக் காரணமாகத் தோன்றுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இரண்டாம் நாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிஞர் அண்ணு ஆகியவர்களும் நாவலரைத் தலைமை தாங்கி மாநாட்டை நடத்தித் தருமாறு வேண்டிக்கொண்டனர்.

இதற்கிடையே மாலையில் பெரு மழை பிடித்துக் கொண்டதால் மாலை 6-30 முதல் 8-30 மணி வரையில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. எனவே, நாவலர்நெடுஞ்செழியன் அவர்கள்தமது தலைமையுரைச் சொற்பொழிவை ஆற்ற இயலாமற் போயிற்று.

நாவலர் அவர்களின் தலைமைச் சொற்பொழிவு அடுத்த நாள் அதாவது மாநாட்டின் மூன்ருவது நாள் (19—5—56) காலையில் நிகழ்த்துவதாக முடிவு செய்யப்பட்டது.

இரவு, இலட்சிய நடிகர் எஸ் எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'மணி மகுடம்' நாடகம சிறப்புற நடைபெற்றது.

இலங்கையில் மரண தண்டனை ஒழிப்பு

தற்காலிகமாக நிறுத்திவைக்கும் மசோதா நிறைவேற்றம்

கொழும்பு, மே 17—

இன்று இலங்கைப் பிரதிநிதிகள் சபையில் மரண தண்டனை அளிப்பதை மூன்று ஆண்டுகள் வரையில் தற்காலிகமாக நிறுத்திவைப்பது என்ற மசோதா நிறைவேற்றப்பட்டது. மரண தண்டனைக்குப் பதில் ஆயுள் தண்டனை கொடுப்பது என்று அம்மசோதா கூறுகிறது.

மரண தண்டனை ரத்து செய்வது திருப்திகரமான சூழ்நிலையை உண்டாக்குமானால் மரண தண்டனையை நிரந்தரமாக ஒழித்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1,400 சத்தியாக்கிரகிகள்

ஔரங்கபாத், மே 17—

'ஐதராபாத்திலுள்ள மராத்திய மாவட்டங்களில், இதுவரையில் 1,400 பேர்கள், மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாய் சேர்க்கப்பட வேண்டும் என்று கூறிச் சத்தியாக்கிரகம் செய்வதில் பங்கு கொண்டுள்ளனர்,' என்று சத்தியாக்கிரக செயற்குழு அறிவித்துள்ளது. குழு குழுவாகப் பம்பாய், டில்லி, பெல்காம் ஆகிய இடங்களுக்குச் சத்தியாக்கிரகிகள் அனுப்பப்படுவர் என்று அறிவிக்கப்படுகிறது.

இரண்டாவது கொலைக்கு மரண தண்டனை!

'காமன்ஸ்' சபையில் திருத்தம்

லண்டன்' மே 18—

'கொலைபுரிந்த குற்றத்திற்காக ஆயுள் தண்டனை ஏற்றுள்ள கைதி, மீண்டும் ஓர் கொலையைச் செய்தால் அவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும்' என 'காமன்ஸ்' சபையில் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 198 வாக்குகளும், எதிராக 194 வாக்குகளும் கிடைத்தனவாம்.

மைசூர் என்பது 'கர்ணடகம்' ஆகும்

ஹூப்ளி, மே. 18—

கன்னடம் பேசும் மக்கள் வழும் பிரதேசங்களை இணைக்கும் பிரதேசத்துக்கு 'மைசூர்' என்னும் பெயரை நீக்கிவிட்டுக் 'கர்ணடகம்' என்னும் பெயரிட வேண்டுமென்று கர்ணடகப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.